மாநகராட்சிக்கு மட்டும் ஒதுக்கி இருக்கின்றார்கள். நிச்சயமாக அந்த நிதி ஆதாரத்தை (மேசையைத் தட்டும் ஒலி) வைத்துக்கொண்டு, அந்தப் பகுதி முழுவதையும் தூய்மைப்படுத்துவதோடு பாதாளச் சாக்கடைத் திட்டமும் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேட்டூர் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் இந்த நிதியாண்டில் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல, மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கொளத்தூர் பேரூராட்சி, மேச்சேரி பேரூராட்சி, பி.என்.பட்டி பேரூராட்சி, வீரக்கல் பேரூராட்சி போன்ற பேரூராட்சிப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகராட்சிக்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படும். சரியான விவரம் தற்போது என்னிடம் இல்லை. அந்த நகராட்சியானது இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மற்ற பேரூராட்சிகள் வரும் நிதியாண்டுகளில் ஒன்றன்பின் ஒன்றாக நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 மே 10]
246—

சீரமைத்தல்

***5566—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியிலுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்பனை செய்யப்படும் குடியிருப்புகள், தனியாருக்கு விற்பனை செய்தபின் அக்குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பராமரிப்பது கிடையாது. இவ்வகையான குடியிருப்புகளின் பராமரிப்பை, இக்குடியிருப்புகளில் குடியிருப்போர் நலச் சங்கம் அமைத்து அவர்களே பராமரித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலே கட்டப்பட்ட வீடுகள் பல ஆண்டுகளாகப் பழுதடைந்திருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளைச் சீர்செய்ய வேண்டுமென்று நான் கேள்வி கேட்டிருந்தேன். அவை விற்பனை செய்யப்பட்டு, பராமரிப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால்தான் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீரமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டன. விற்பனை செய்த பிறகு வீட்டு வசதி வாரியம் அவற்றைப் பராமரிப்பு செய்யாது. குடியிருப்போர் நலச் சங்கம் அமைத்துதான் பராமரிப்பு செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கேட்கின்ற கேள்வியே என்னவென்று எனக்குப் புரியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் தொகுதியில் மசக்காளிபாளையத்தில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டன. அவை முழுமையாகச் சேதமடைந்து, அதில் குடியிருக்க முடியாமல் மக்கள் எல்லோரையும் வெளியேற்றிவிட்டார்கள். மக்கள் எல்லோரும் சேர்ந்து தி.மு.க-வையும் வெளியேற்றிவிட்டார்கள். ஆகவே, அந்தக் குடியிருப்புகளையெல்லாம் பழுதுபார்த்து, சீரமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த குடியிருப்புகளைச் சீரமைப்பதற்கு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு பகுதி-1 திட்டத்தின்கீழ் 10 கோடியே 96 இலட்சம் ரூபாயும், தமிழக அரசின் நிதியிலிருந்து 10 கோடி ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த நிதியைக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குடியிருப்புகள் பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

2012 மே 10]

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சி பாரபட்சமின்றி ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணைக் கேள்விகளை இந்தக் கூட்டத் தொடரிலேயே நாங்கள் எல்லோரும் கேட்பதற்கு அனுமதித்த தங்களுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நந்தனம் அருகிலுள்ள மஸ்தான்தோட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 50 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகள் முழுப் பணத்தையும் செலுத்திவிட்டனர். இவற்றில் 31 வீடுகளுக்கான கிரயப் பத்திரம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. 19 வீடுகளுக்கு முழுப் பணத்தைச் செலுத்திய பின்பும் வீட்டு வசதி வாரியம் அறிக்கை அனுப்பாமல் உள்ளதால் பத்திரப் பதிவு செய்யவும், கிரயப் பத்திரம் கிடைக்கப் பெறாமலும் இருக்கின்றன. எனவே, அந்த 19 பயனாளிகளுக்கும் கிரயப் பத்திரம் கிடைக்கச் செய்ய அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் முழுவதும் கட்டியிருந்தால் கிரயப் பத்திரம் கண்டிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும். பணம் பாக்கி இருந்தால்தான் கிரயப் பத்திரம் கொடுக்கப்படாமல் இருக்கும். இல்லையென்றால் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்திருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த 19 பேரும் முழுப் பணத்தையும் கட்டியிருந்தால் உடனடியாக கிரயப் பத்திரம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குடியிருக்கின்ற ஆலிவர் சாலையிலுள்ள தமிழ்நாடு அரசுக் குடியிருப்பில் கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அந்தக் கட்டடத்தை மிக விரைவிலே சீரமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வருடம் பழுதுபார்ப்பதற்கு மட்டும் 20 கோடியே 96 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த நிதியைப் பயன்படுத்தி மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியில் இருக்கின்ற வாரியக் குடியிருப்புகள் பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.*

திரு. எம்.கே. செல்வராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்தில் சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கனரம்பட்டி பகுதி, நாராயண நகர் மற்றும் கோட்டை பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் உள்ளன. அவற்றைச் சீரமைக்க அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் பழுது ஏற்பட்டிருப்பின் அது நிச்சயமாக சீர்செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.*

திரு. பு. வெற்றிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள், அதேமாதிரி வீட்டு வசதி வாரிய இடங்கள் கடந்த காலங்களிலே பினாமி பெயர்களிலே பல இடங்களில் பறிபோயிருக்கின்றன. அவை இன்றும் பினாமி பெயர்களிலே இருக்கின்றன. அது வீட்டு வசதி வாரியத்தால் கண்டறியப்படுவது மிகவும் சிரமம். எனவே, காவல்*

துறை மற்றும் காவல் புலனாய்வுத் துறையின் உதவியைப் பெற்று, அதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு ஒதுக்கப்பட்டவர்கள் அந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு நிறைய பேர் சென்றுவிட்டார்கள். அதற்கு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு சென்று ஆய்வு நடத்தி, எந்தெந்தக் குடியிருப்புகளில் வாடகைக்கு விட்டிருக்கிறார்களோ அதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு வாரியம் உத்தரவிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் நகரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சரி செய்து தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும், பழுது ஏற்பட்டிருக்கின்ற குடியிருப்புகள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த வருடம் பழுது நீக்கம் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டி

வழங்கப்பட்ட வீடுகளில் உரிமை பெற்றவர்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த வீட்டை alteration முறையிலே, ஒரு மாடி கட்டியிருக்கின்ற அந்த வீட்டின் மேலே இன்னும் இரண்டு, மூன்று மாடிகள் கட்டுவதைப்போல, பல்வேறு மாற்றங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதை அரசு அனுமதித்துள்ளதா அல்லது விதியை மீறிச் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த ஊரில், எந்தக் கட்டடத்தில் அப்படி கட்டப்பட்டிருக்கிறதென்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், விற்பனை செய்யப்பட்டிருந்தால் அந்த வீட்டை அவர்கள் கட்டிக்கொள்ளலாம். அவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டது என்றால், முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், வாடகைக்குக் குடியிருப்பவர்கள் நிச்சயமாக அப்படிச் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

முதியோர் இல்லங்கள்

***733—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதரவற்ற முதியோர்களைப் பராமரிக்க வட்டாரந்தோறும் முதியோர் இல்லங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS